## துறையூர் நகராட்சி

2020 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 31.08.2020 திங்கள் கிழமை (தமிழ் சார்வரி வருடம் ஆவணி மாதம் நாள்.15) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 31.08.2020 | **01** | ஆணையர் அவர்களது ஆகஸ்டு மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு :**பதிவு செய்யலாம் | தீர்மான எண்:479<br>பதிவு செய்யப்பட்டது |
| 31.08.2020 | **02** | நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்டு மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு :**பதிவு செய்யலாம்.<br>. | தீர்மான எண்:480<br>பதிவு செய்யப்பட்டது. |
| 31.08.2020 | **03** | துப்புரவு அலுவலர் அவர்களது ஆகஸ்டு மாதம் 2020 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு :**பதிவு செய்யலாம் | தீர்மான எண்:481<br>பதிவு செய்யப்பட்டது. |
| 31.08.2020 | **04** | துறையூர் நகராட்சி நிர்வாக பயன்பாட்டிற்காக ஈப்பு வாகனம் ஒன்று வாங்கிக் கொள்ளவும் மற்றும் புதிய ஓட்டுநர் பணியிடம் தோற்றுவித்துக்கொள்ளவும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 18.02.98-ம் தேதிய செயல்முறை ந.க.எண்.95484/97/இ1-ல் அனுமதி வழங்கப்பட்டது.<br>இதன் படி ஓட்டுனர் பணியிடம் 09.12.1998 முதல் நிரப்பப்பட்டு 30.09.2013 வரை நீட்டித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.5436/2009/எப்3 நாள்.03.12.2013-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இப்பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2014, 01.10.2014 முதல் 30.09.2015, 01.10.2015 முதல் 30.09.2016, 01.10.2016 முதல் 30.09.2017, 01.10.2017 முதல் 30.10.2018, 01.10.2018 முதல் 30.09.2019 மற்றும் 01.10.2019 முதல் 30.09.2020வரை நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி | தீர்மான எண்:482<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | உரியக் கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் வழியாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.<br>மேலும் இப்பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரிய கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.6569/99/சி1)<br>**அ.கு:** அனுமதிக்கலாம். | |
| 31.08.2020 | **05** | இந்நகராட்சி தெருவிளக்குகள் பராமரிக்க ஒரு மின் கம்பியாளர் (Wire Man) மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் (Helper) பணியிடங்களை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 09.11.1999-ம் தேதிய செயல்முறை கடிதம்மூ.மு.எண்.83367/98/எப்5ல் தோற்றுவித்துக் கொள்ள ஆணையிடப்பட்டது. இந்த உத்திரவின்படி இந்நகராட்சியில் மின் கம்பி உதவியாளர் (Helper) பணியிடத்தினை மட்டும் தினக்கூலி பணியாளர்கள் பட்டியலில் இருந்து ஒருவரை 18.02.2000 முதல் நியமனம் செய்யப்பட்டது. இப்பணியாளர் 31.05.2017-ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுவிட்டதால் இப்பணியிடம் 01.06.2017 முதல் காலியாக உள்ளது.<br>இப்பணியிடத்தினை ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு கோரி கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக இப்பணியிடம் 30.09.2013 வரை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 03.12.2014ம் தேதிய செயல்முறை உத்திரவு ந.க.எண்.5436/09/எப்3-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>இப்பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2014 மற்றும் 01.10.2014 முதல் 30.09.2015, 01.10.2015 முதல் 30.09.2016, 01.10.2016 முதல் 30.09.2017, 01.10.2017 முதல் 30.09.2018, 01.10.2018 முதல் 30.09.2019 மற்றும் 01.10.2019 முதல் 30.09.2020 முடிய நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரியக்கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.<br>இப்பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால், இப்பணியிடத்தினை மேலும் 01.10.2020 முதல் 30.09.2021 வரை நீட்டித்துக் கொள்ள அனுமதி வேண்டி உரியக் கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.3565/2001/சி1)<br>**அ.கு:** அனுமதிக்கலாம். | தீர்மான எண்:483<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **06** | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு ஒரு லாரி ஓட்டுனர் மற்றும் துலக்குனர் பணியிடங்களை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் | தீர்மான எண்:484<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 02.05.91-ம் தேதிய செயல்முறை கடிதம் மூ.மு.எண் 20220/91/ஜே1-ல் நியமானத் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக தோற்றுவித்துக்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டது.<br>மேற்படி பணியிடங்களை 27.06.91 முதல் ஓட்டுனர் பணியிடமும், 20.05.91 முதல் துலக்குநர் (Cleaner) பணியிடங்களும் நியமனம் செய்யப்பட்டது. நியமானம் செய்யப்பட்டது முதல் ஒவ்வொரு ஆண்டும் காலநீட்டிப்பு கோரி கருத்துருக்கள் அனுப்பப்பட்டு உத்திரவு பெறப்பட்டு வந்துள்ளது. இறுதியாக இப்பணியிடத்தினை 30.09.2014 வரை நீட்டித்துக்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06.11.2014-ம் தேதிய செயல்முறை உத்திரவு மூ.மு.எண். 22713/2014/ஜே3-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>இந்த ஓட்டுனர் மற்றும் துலக்குநர் பணியிடங்கள் பொது சுகாதாரப்பிரிவிற்கு அவசியமாக தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2014 முதல் 30.09.2015 வரை, 01.10.2015 முதல் 30.09.2016 வரை, 01.10.16 முதல் 30.09.17, 01.10.17 முதல் 30.09.18 வரை, 01.10.18 முதல் 30.09.2019 வரை மற்றும் 01.10.2019 முதல் 30.09.2020 வரை உள்ள காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரிய கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.<br>மேலும் இப்பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரிய கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.4290/சி1/91).<br>**அ.கு:** அனுமதிக்கலாம். | |
| 31.08.2020 | **07** | இந்நகராட்சிக்கு அரசாணை நிலை எண்.965 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்.01.07.83-ல் புதியதாக ஒரு மூன்றாம் நிலை நகராட்சிப்பொறியாளர் பணியிடம் தோற்றுவித்துக்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டது. இதன் பேரில் நகராட்சி பொறியாளர் பணியிடம் 29.08.03-ல் நிரப்பப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நீடித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரியக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டு உத்திரவு பெறப்பட்டு வருகிறது. இறுதியாக இப்பணியிடம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 03.12.2013-ம் தேதிய செயல்முறை கடிதம் ந.க.5436/2009/எப்3-ல் 1.10.2012 முதல் 30.09.2013 முடிய நீடித்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியில் பல்வேறுத் திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணிகள் செயல்படுத்த இப்பொறியாளர் பணியிடம் மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது. | தீர்மான எண்:485 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | இப்பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2014, 01.10.2014 முதல் 30.09.2015, 01.10.2015 முதல் 30.09.2016, 01.10.2016 முதல் 30.09.2017, 01.10.2017 முதல் 30.09.2018, 01.10.2018 முதல் 30.09.2019, 01.10.2019 முதல் 30.09.2020 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி வேண்டி உரியக் கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.<br>மேலும் இப்பணியிடத்தினை ஓராண்டு காலத்திற்கு 01.10.2020 முதல் 30.09.2021 வரை நீட்டித்துக்கொள்ள அனுமதி கோரும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.5986/சி1/83).<br>**அ.கு:**நகராட்சி பொறியாளர் பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் 01.10.2020 முதல் 30.09.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதிக்கலாம். | |
| 31.08.2020 | **08** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுக்கு ஓட்டுனர் பணியிடத்தினை தோற்றுவித்துக்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 25.03.97-ம் தேதிய கடிதம் ந.க.எண்.62241/96/எப்3-ல் அனுமதிக்கப்பட்டது. நியமனம் செய்யப்பட்டது முதல் ஒவ்வொரு ஆண்டும் கால நீட்டிப்புக்கோரி கருத்துருக்கள் அனுப்பப்பட்டு உத்திரவு பெறப்பட்டுள்ளது. இப்பணியிடத்தினை 30.09.2014 வரை நீட்டித்துக்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06.11.2014-ம் தேதிய செயல்முறை உத்திரவு மூ.மு.எண்.22713/2014/ஜே3-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இப்பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2014 முதல் 30.09.15, 01.10.2015 முதல் 30.09.2016, 01.10.2016 முதல் 30.09.2017, 01.10.2017 முதல் 30.10.2018, 01.10.2018 முதல் 30.09.2019 மற்றும் 01.10.2019 முதல் 30.09.2020 வரை உள்ள காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரியக் கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.<br>மேலும், இப்பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் இப்பணியிடத்தினை 01.10.2020 முதல் 30.09.2021 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துக்கொள்ள அனுமதி வேண்டி உரியக் கருத்துருக்கள் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.759/சி1/99).<br>**(அ.கு)** அனுமதிக்கலாம் | தீர்மான எண்:486<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.08.2020</td>
<td>09</td>
<td>அரசாணை (நிலை) எண்.145 நாள் 21.09.2011 நநிமகு வழங்குதுறை (MEI)ல் தேர்வு நிலை நகராட்சி செலுத்த வேண்டிய ஆண்டு பங்குத் தொகை ரூ. 90000/- என நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.276/2020/A2 நாள் 18.08.2020-ல் 2020-21-ம் ஆண்டுக்கான பங்குத் தொகை செலுத்த கோரியுள்ளார்கள். எனவே ஆண்டு பங்குத் தொகை ரூ.90000/- செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.509/சி1/2020)<br>(அ.கு) அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண் :487<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.08.2020</td>
<td>10</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 8,15,16,17,18,34,43,44.மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2020-2021, முதல் 2022-2023 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 24.06.2020-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினதந்தி, திருச்சி பதிப்பு</td><td>07.06.2020</td><td>ரூ.7392/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.7392/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.380/2020/அ1)<br>அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td>தீர்மான எண்:488<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.08.2020</td>
<td>11</td>
<td>இந்நகராட்சியில் 2019-2020-ம் ஆண்டுகான கணக்குகள் (வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி) CFC யில் முடிக்கப்பட வேண்டி உள்ளது. ஆதலால் இப்பணியினை Consultant மூலம் செய்து முடிக்க உரிய Consultantகளிடம் விளைப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.</td>
<td>தீர்மான எண்:489<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>வருவாய் நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் முடித்து கொடுக்க (தொகை)</th></tr>
<tr><td>1</td><td>V. Seenivasan M.Com.,<br>Consultant,<br>144/62, Dhanuskodiapuram,<br>Pillaiyar kovil Street, Kovilpatti.</td><td>ரூ.42000/-</td></tr>
<tr><td>2</td><td>S. Venkataraj B.Com.,<br>Consultant,<br>36 Colombu Street Krishnapuram,<br>Kadayanallur.</td><td>ரூ.45000/-</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1-ல் உள்ள Thiru.V. Seenivasan Consultant கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளது. ஆதலால் அன்னாரிடம் பணியை ஒப்படைத்து பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.896/2019/பி1)<br>
அலுவலக குறிப்பு<br>
அ). அனுமதிக்கலாம்.<br>
ஆ). மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் ரூ.50,000/- வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.08.2020</td>
<td>12</td>
<td>இந்நகராட்சியில் 2019-20-ம் ஆண்டில் ஒப்பந்த பணிகளில் பிடித்தம் செய்த வருமான வரி, ஜி.எஸ்.டி மற்றும் சேவை வரி பிடித்தங்கள். உரிய கணக்கில் செலுத்தி அதன் விபரங்களை சம்மந்தப்பட்ட நபர்களின் கணக்கில் Online-ல் வரவு வைத்து Upload செய்யும் பணியினை ஆலயம் அசோசியேட்ஸ் திருச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நிறுவனம் கீழ்கண்ட விவரப்படியான பணிகளை செய்து முடித்து தொகை வழங்க கேட்டுக்கொண்டுள்ளது.<br>
1. E-Filing TDS 26q & 24q format uploading and contractors certificate Downloading fees. ____ Rs.19550/-<br>
2. GST 7, 7A Filling & downloading charges. ____ Rs.11500/-<br>
3. Service Tax Filling and uploading charges (2015-16 To 2017-18) ____ Rs.12750/-
</td>
<td>தீர்மான எண்:490<br>அனுமதிக்கப்பட்டது<br>.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>மேற்படி ஆலயம் அசோசியேட்ஸ் திருச்சி நிறுவனம் பணிகள் முடித்து கொடுத்துள்ளது. எனவே தொகை ரூ.43800/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2476/2020/பி1)<br><br>அகு: அ) அனுமதிக்கலாம்.<br><br>ஆ) மேற்படி செலவினம் ரூ.43800/- வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.08.2020</td><td>13</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 26.08.2020ம் தேதிகோரப்பட்டது. வரிசை 1 முதல் 5 வரை கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண் .</th><th>குத்தகை இனம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.</td></tr>
<tr><td>2.</td><td>துறையூர் நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம்.</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>4.</td><td>வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17(ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)</td></tr>
<tr><td>5.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).</td></tr>
</table>
ந.க.எண்.380/2020/அ1<br>அலுவலக குறிப்பு :<br>மேற்காணும் குத்தகை இனங்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளது என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.2,3,4, மற்றும் 5-ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகாததால் கேட்பு இல்லை எனவும் வரிசை எண்.1, இந்நகராட்சி அண்ணாபேருந்து நிலையத்தில்</td><td>தீர்மான எண்:491<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 01.07.2020-ம் தேதி முதல் பேருந்துகள் இயக்கப்படவில்லை. இப்பேருந்துகளிடம் தினசரி கட்டணம் வசூல் செய்யப்படவில்லை என்பதனை பதிவு செய்யவும் மேற்காணும் வ.எண்.1 முதல் 5 வரை உள்ள இனங்கள் மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.08.2020 | **14** | துறையூர் நகராட்சி வார்டு எண் 17 மற்றும் 18 விநாயகர் தெரு பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பிறபயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்ய 3 எண்ணிக்கையில் சின்டெக்ஸ் அமைத்தல் மற்றும் குழாய் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2260/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:492<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **15** | துறையூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் உள்புறம் மற்றும் வெளிப்புறம் பாதுகாப்பு கருதி கண்காணிப்பு கேமரா (CC TV) அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2310/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:493<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **16** | துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் எண்.TN48Z6096-க்கு வருடாந்திர காப்பீட்டு காலம் 19.08.2020-வுடன் முடிவடைவதால் மேலும் ஒருவருட காலத்திற்கு காப்பீடு புதுப்பித்துக்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி மேற்படி ஈப்பு வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு புதுப்புத்துக்கொள்ள தொகை ரூ.12859/- மட்டும் இந்நகராட்சி ஓட்டுநர் திரு.M.கணேசன் அவர்களால் ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே, அலுவலக ஈப்பு வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு புதுப்பிக்க செலுத்தப்பட்ட தொகை ரூ.12859/- மட்டும் திரு.M.கணேசன் ஓட்டுநர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.4884/2018/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:494<br>அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **17** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியில் 3கிலோ/Hours அளவுள்ள கேஸ் குளோரினேசன் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கேஸ் குளோரினேசன் சாதனம் பழுதடைந்துள்ளதால் சீரமைத்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் தங்குதடையின்றி வழங்க Gas Chlorination-ஐ மராமத்து செய்திட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்.12.08.2020-ல் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 25.08.2020 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி 3 விலைப்புள்ளிகள் | தீர்மான எண்:495<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>Microtech Engineering,<br>No.34 Peelamedu Industrial Estate,<br>VK Road, Peelamedu,<br>Coimbatore - 641004.</td><td>Rs.74517/-</td></tr>
<tr><td>2</td><td>R.K.Enterprises,<br>Elappully P.O 678622,<br>Palakkad, Kerala.</td><td>Rs.69325/-</td></tr>
<tr><td>3</td><td>Perfect Trading Company,<br>A Block 12 - Bafna Court,<br>West Ponnurangam Road,<br>RS Puram, Coimbatore - 641 002.</td><td>Rs.81090/-</td></tr>
</table>
மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.2ல் உள்ள R.K.Enterprises நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.2258/2020/இ1)<br>
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.08.2020</td><td>18</td><td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியில் 3கிலோ/Hours அளவுள்ள கேஸ் குளோரினேசன் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கேஸ் குளோரினேசன் சாதனம் பழுதடைந்துள்ளதால் அதை சீரமைத்து பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் தங்குதடையின்றி வழங்க Gas Chlorination-ஐ மராமத்து செய்திட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2258/2020/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:496<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>19</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.5 பெரிய ஏரி பகுதியில் உள்ள ஆழ்துளைக்கிணறு மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு தண்ணீர் விநியோகம் செய்திட ஏதுவாக புதிய மின் இணைப்பு பெறுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வைப்புத்தொகை செலுத்த உத்தேச செலவினம் ரூ.20000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.2309/2020/இ1)</td><td>தீர்மான எண்:497<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>31.08.2020</td><td>20</td><td>துறையூர் நகராட்சியில் ஆத்தூர் சாலையில் உள்ள மயானத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி 2015-16 & 2016-17 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி எரிவாயு தகனமேடையை இயக்குவதற்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி (Consent to Operate) முடிவடைந்ததால் 2020-2022 நடப்பாண்டு நவீன எரிவாயு தகனமேடையை தொடர்ந்து இயக்குவதற்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியை புதுப்பித்துக்கொள்ள தொகை ரூ.14200/- மட்டும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருச்சி அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.3827/2015/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:498<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>21</td><td>துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு 2020-2021 ஆண்டுக்கு டெங்கு காய்ச்சல் மற்றும் சிக்கன் குனியா போன்ற நோய்கள் 24 வார்டுகளில் பரவாமல் தடுக்கும் பொருட்டு நல்ல தண்ணிரில் உருவாகும் டெங்கு கொசுக்களை அழிக்க அபேட் மருந்து மற்றும் டெங்கு முதிர் கொசுக்களை அழிக்க பைரித்திரியம் புகை மருந்து கீழ்கண்ட வாறு வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.0 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .(ந.க.எண்.4039/2014/H1)<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>மருந்தின் பெயர்</th><th>அளவு</th></tr>
<tr><td>1</td><td>டெமிபாஸ் (ABATE)</td><td>50 லிட்டர்</td></tr>
<tr><td>2</td><td>பைரித்திரியம்(pyrerthirum)</td><td>100 லிட்டர்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : 1.மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:499<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.08.2020</td><td>22</td><td>தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் தலைவர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் T4/TNPCB/F.007641/BMWM/2020-1 Dated 26.04.2020 ன்படி கொரேனா தொற்றுகள் வீடுகளில் உருவாகும் முககவசம் மற்றும் கையுறைகளை மருத்துவக்கழிவுகள் மேலாண்மை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கையாள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மெடிகேர் எண்விரோ சிஸ்டம்,புதிய குடியிருப்பு பகுதி, புதுக்கோட்டை ரோடு தஞ்சாவூர்.என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு கழிவுகளைக்</td><td>தீர்மான எண்:500<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கையாள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட ஒப்பந்தத்தில் 15 கிலோவிற்குள் உருவாகும் மேற்கண்ட கழிவுகளை சேகரித்து இறுதியாக்கம் செய்திட மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி துறையூர் நகர்பகுதியில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் உருவாகும் கழிவுகளை கையுறை மற்றும் முககவசங்களை மேற்காண்ட நிறுவனத்துடன் பரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு அப்புறப்படுத்துவதற்கும் அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/- செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.810/2020/எச்1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மெடிகேர் என்விரோ சிஸ்டம், புதிய குடியிருப்பு பகுதி, புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கும் அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.20,000/- செலுத்துவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.08.2020 | **23** | துறையூர் நகராட்சியில் வார்டு எண்.7 திரௌபதி அம்மன் கோவில் தெருவிற்கும், வார்டு எண்.10 புதுக்காட்டுத்தெருவிற்கும் 14th CFC திட்டத்தில் ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.<br>திரௌபதி அம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை பணிகள் நடைபெறும் போது வேங்கடத்தானூர் சாலையினை ஒட்டியுள்ள குறுக்கு தெருவிற்கும் சிமெண்ட் சாலை அமைத்து தர அப்பகுதி பொதுமக்கள் கோரியதற்கிணங்க மேற்படி பழுதடைந்துள்ள திரௌபதி அம்மன் தெரு வேங்கடத்தானூர் சாலை இணைப்பு குறுக்கு தெருவிற்கும் சிமெண்ட் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.34/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:501 அனுமதிக்கப்பட்டது |
| 31.08.2020 | **24** | துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் உட்புறம் அமைக்கப்பட்ட தார் சாலை சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. கொரோனா கோவிட்-19 நோய்தொற்று நடவடிக்கை காரணமாக ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் பேருந்து நிலையத்தில் | தீர்மான எண்:502 அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வாகனப்போக்குவரத்து இல்லாமல் இருந்த நிலையில் தற்போது ஊரடங்கு தளர்வு ஏற்படுத்தி உள்ளதால் போக்குவரத்து தொடங்க வாய்ப்புகள் உள்ள நிலையில் பேருந்து நிலையத்தில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க மதிப்பீடு ரூ.2.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.34/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி